புதிய அவையம்

**PUTHIYA AVAIYAM**
(PEER – REVIEWED JOURNAL)
**ISSN :2456-821X**
**Vol. 08, Issue 02, January 2025**

==================================================================

**முனைவர் ஆ. பிரபு**
**உதவிப் பேராசிரியர்**
**தமிழ்த்துறை**
**தூய நெஞ்சக் கல்லூரி தன்னாட்சி**
**திருப்பத்தூர் - 635 601**
**திருப்பத்தூர் மாவட்டம்**

பா. ரம்யா(322PHD241F268TAM)
**முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்**
**தமிழ்த்துறை**
**தூய நெஞ்சக் கல்லூரி தன்னாட்சி**
**திருப்பத்தூர் - 635 601**
**திருப்பத்தூர் மாவட்டம்**

***(திருவள்ளுவர் பல்கலைக் கழக இணைவுபெற்றது)***

==================================================================

# சிறுதெய்வ வழிபாட்டில் பெண் தெய்வம்

==================================================================

**ஆய்வுச் சுருக்கம்**

நாட்டுப்புற மக்களால் வழிபடப்பெறும் தெய்வங்கள் நாட்டுப்புறத் தெய்வங்களாகும். இத்தெய்வங்களின் வரலாறு மக்களால் நன்கு அறியப்பட்டவையே. இத்தெய்வங்களின் தோற்றங்களுக்குப் பல வாய்மொழிக் கதைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், இத்தெய்வங்கள் மக்களுள் மக்களாக வாழ்ந்து, தானாகவோ, ஊர் நன்மைக்காகவோ, தம் இன்னுயிரை இழந்தவர்களாகவர். பெரும்பாலான பெண் தெய்வங்கள் கொலை செய்யப்பட்டு இறந்தவர்கள் என்பது கவனிக்கத்தக்கதாகும்.ஊரில் ஏற்படும் நோய்க்கும், மழை பெய்யாமைக்கும் இத்தெய்வங்களை காரணம் என்று நம்பினர். எனவே, அவற்றுக்கு வழிபாடுகள் செய்து மக்கள் தெய்வங்களாக வணங்கினர். அவ்வாறு வணங்கப் பெறும் தெய்வங்களுள் பெரும்பான்மை பெண் தெய்வங்களே என்பது குறிப்பிடத்தக்கது.

**குறிச்சொற்கள்**

சிறு தெய்வம் , பெண் தெய்வம், நாட்டார் வழக்காறு

**முன்னுரை**

சிறுதெய்வ வழிபாடு என்பது கிராமங்களைச் சார்ந்த மக்களின் வாழ்வியல் நடைமுறைகளைப் பிரதிபலிக்கும் பண்பாட்டுக் கூறாகும். இத்தெய்வங்கள் மலைகள், மரங்கள் , நீர் நிலைகளில் உறைவதாக மக்கள் நம்பி வழிபட்டனர். மரம், நீர் நிலையின் அருகில் இருக்கும் சிறு தெய்வங்கள் பெரும்பாலும் பெண் தெய்வங்களாகவே இருக்கின்றன. சங்க இலக்கியத்திலும் நீர் நிலைகள், மரங்களில் உள்ள தெய்வங்கள் பெண் சார்ந்தவைகளாக இருப்பதையே பெரும்பாலும் காண முடிகிறது.

**சிறுதெய்வ வழிபாடு**

சிறுதெய்வ வழிபாடு என்பது இயற்கை வணக்கத்தில் இருந்து தோன்றியிருக்க வேண்டும். இயற்கை வழிபாடு சங்க காலத்தில் இருந்து வந்ததைச் சங்கப் பாடல்கள் வழியாக அறிய முடிகிறது. இடைக்காலத்தில் பெருமளவில் சிறுதெய்வ வழிபாடு இடம்பெற்றுள்ள தையும் காண முடிகிறது. சிறுதெய்வ வழிபாடு குறித்து,

“இருநிலத்தில் எமக்கெதிரா வாரு மில்லை

சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்”

(தேவாரம் - ப. 5)

தேவாரப் பாடலில் திருநாவுக்கரசர் மேற்கண்டவாறு சிறுதெய்வத்தினைக் கூறுகிறார். இதே கருத்தினையே இராமலிங்க அடிகள்,

“நலிவுறு சிறுதெய்வம்”

(திருவருட்பா - ப.59)

என விளக்கம் தந்துள்ளார். இவ்விருவரும் சிறுதெய்வம் என்ற சொல்லினைப் பயன்படுத்தி இருக்கின்றனர். சங்க இலக்கியங்களில் சிறுதெய்வம் என்ற சொல் காணப்படவில்லை. பெருந்தெய்வம் என்ற சொல்லைக் காண முடிகிறது. பெருந்தெய்வத்தினை,

வெருவரு கடுந்திறல் இருபெருந் தெய்வத்து

உருவுடன் இயைந்த தோற்றம் போல"

(அகம். 360: 6 - 7)

என்று அகநானூற்றுப் பாடல் விளக்கம் தருகின்றது. இதேபோன்று பெருந்தெய்வம் என்ற சொல்லினைக் குறுந்தொகை 263 : (3-4), புறநானூறு 58 : 10, திருமுருகாற்றுப்படை அடி.160 போன்றவற்றில் காண முடிகிறது. தெய்வம் என்று குறிப்பிடாமல், பெருந்தெய்வம் எனக் குறிப்பிடப்படுவதால் சிறுதெய்வம் இருந்ததாகப் பொருள் கொள்வதாகும். சிறுதெய்வங்கள் என்பது மக்கள் தங்களது விருப்பமான வழிபாட்டிற்காக உருவாக்கியதாகும். சிறுதெய்வம் என்பது நமது முன்னோர் வழிபாடாக ஏற்றுக் கொள்ளலாம்.

**சிறுதெய்வ வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்**

பண்டைக்கால மனிதன் சிந்திக்கத் தொடங்கிய போது அவனது மனதில் விடைபெற இயலாத பல வினாக்கள் எழுந்தன. அவ்வகை வினாக்களுக்கு விடைகாணும் முயற்சியின் முதல் நிலையே தெய்வ வழிபாட்டின் தோற்றமாகும். இயற்கையின் மாற்றங்களுக்கும் சீற்றங்களுக்கும் காரணம் காணப் பண்டைய மனிதன் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவே வழிபாடு தோன்றக் காரணமாக இருந்தன எனலாம். சிறுதெய்வ வழிபாட்டின் வரலாறு மாந்தரினப் பண்பாட்டின் வரலாறாகவே பார்க்க வேண்டி உள்ளது. ஏனெனில் இவ்வழிபாடு மனித இனத்தின் முன்னோர் வழிபாடாகும். தங்களது முன்னோரைத்தான் சாமியாகப் பாவித்து வழிபட்டு வருகின்றனர். குலதெய்வ வரலாற்றினை வைத்துத்தான் அவர்களின் பூர்வீகம் எது? எங்கிருந்து வந்தனர்? என்பதையும் அறிய முடிகிறது. வழிபாடு மனிதனுடைய அச்ச உணர்வில் இருந்தும் குற்ற உணர்விலிருந்தும் உண்டாகி இருப்பதாகக் கூறப்படுகிறது. வழிபாடு என்பது சமூகத்தில் வாழுகின்ற மக்களை ஆற்றுப்படுத்தவும் நெறிப்படுத்தவும் வழி செய்கிறது. வழிபாட்டு முறைகளால்தான் மனிதன் பக்குவப்பட்டான் என்பது மிகையல்ல. காலமாற்றத்திற்கு ஏற்ப தங்களின் வழிபடும் முறையினை மனிதன் மாற்றி வந்திருக்கிறான். இதனால்தான் இன்றளவும் இளைய சமுதாயத்தினரும் இவ்வழிப்பாட்டினைத் தொடர்ச்சியாகப் பல்வேறு தலைமுறைகள் தாண்டியும் அறுபடா சங்கிலித் தொடராகப் பின்பற்றி வருகின்றனர்.

**பெண் தெய்வங்கள்**

நாட்டுப்புறத் தெய்வங்களில் பெண் தெய்வங்களே மிகுதி என்பதால் பெண் தெய்வங்கள் முதன்மை நிலையில் வைத்து வழிபடப்படுகின்றன. இனக்குழுச் சமுதாயத்தின் தொடக்க காலந்தொட்டுச் செழுமையின் அடையாளமாகவும், வலிமையின் குறியீடாகவும் பெண் கருதப்பட்டதால் பெண் வணங்குதற்கும் வழிபாட்டிற்கும் உரியவளானாள். பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பெண் தெய்வப் பெயர்களும், பெண் தெய்வ வழிபாடுகள் பற்றிய குறிப்புகளும் நிறைந்து காணப்படுகின்றன.

நெய்தல் நிலமான கடற் பரப்பிலும் பெண் தெய்வ வழிபாடு இருந்ததாகக் குறிப்புகள் உள்ளன. கடல் தெய்வம் கரையில் நின்றிருந்தமையும், அதெய்வத்தை அமைதிப்படுத்த அணிகளைத் துறந்த மகளிர் வெறியாட்டம் நிகழ்த்தினர் என்பதை,

> “ கடல் கெழு செல்வி கரை நின்றாங்கு
>
> நீயே கானம் ஒழியே யானே
>
> வெறி கொள் பாவையிற் பொல வெண் அணி துறந்து”
>
> (அகம்.370:12-14)

என்னும் வரிகள் வாயிலாக அறிய முடிகிறது நீர்த் துறையாக இருக்கின்ற கடலிலும் அதன் தெய்வம் பெண் தெய்வமாக இருக்கின்றது. தலைவியின் நோய் தனிய நீர்த் துறையில் உய்யும் கடவுளுக்குத் தங்களது பயன்பாட்டு பொருளான கல்லும் கண்ணியும் படைத்து வெள்ளாட்டுக் கிடாயைப் பலியீட்டும் நோய் தனியவில்லை என அகநானூறு சுட்டுகிறது.

பெண் தெய்வங்கள்

- தாய்த் தெய்வங்கள்
- கன்னித் தெய்வங்கள்

மனித உயிர்கள் அனைத்தையும் பெற்றெடுத்தவள் என்ற அடிப்படையில் தாயாகவும், என்றும் மாறாத, அழியாத கன்னித் தன்மை உடையவள் என்று அடிப்படையில் கன்னியாகவும் பெண் தெய்வங்களை வழிபடும் மரபு காணப்படுகிறது. உலகின் பல்வேறு நாடுகளிலும் கூட இம்மரபு இருந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

**தாய் தெய்வ வழிபாடு**

'அம்மன்' என்ற பொதுப் பெயரால் அழைக்கப்படும் பெண் தெய்வங்கள் பெண்மை மற்றும் தாய்மைக் குணங்களை ஒருசேரப் பெற்றவையாக விளங்குகின்றன. தொடக்கக் காலத்தில் வளமை தொடர்பான சடங்குகள் பெண்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதால் பின்னாளில் பெண்களே வளமையின் குறியீடாகக் கருதி வழிபடப்பட்டனர் . இதுவே, தாய்த் தெய்வ வழிபாடு தோன்றி வளர்வதற்குக் காரணமாய் அமைந்தது.

மாயோனுக்கு முன்னரே காடுறை கடவுளாகத் தாய்த் தெய்வம் இருந்தது என்பதை,

" கானமர் செல்வி அருளலின் வெண்காற்
பல்படைப் புரவி எய்திய தொல்லிசை
நுணங்கு நுண்பனுவற் புலவன் பாடிய"

(அகம் – 345: 3-4)

என்னும் வரிகள் சுட்டுகிறது. கானமர் செல்வியின் அருளால், மன்னன் நன்னன் வெண் கால்களை உடைய குதிரைகளைப் பெற்றமை சுட்டப்படுகிறது. இத்தெய்வத்தைப் பொருநராற்றுப்படை 'காடுறை கடவுள்' என்றும் மணிமேகலை கானமர் செல்வி என்றும் சுட்டுகின்றன.

மழையாகப் பொழிந்து மண்ணுயிர்களைக் காப்பவள் மாரியம்மன், நதியாக ஓடி நஞ்சை புஞ்சைகளைக் காப்பவள் கங்கையம்மன், தீமைகள் அண்டாதவாறு காப்பவள் எல்லையம்மன், என்று பெண் தெய்வங்கள் வளமையை மையமிட்டே வணங்கப்பட்டன; வழிபடப்பட்டும் வருகின்றன. காவிரி, கங்கை, யமுனை, சரஸ்வதி போன்ற பெருநதிகளைப் பெண் தெய்வங்களாகவும், தாய்த் தெய்வங்களாகவும் வழிபடுவது இந்திய மரபாகும்.

நாட்டுப்புறச் சிறுதெய்வங்களாக மாரியம்மன், காளியம்மன், முத்தாலம்மன், திரௌபதியம்மன், நாச்சியம்மன், பேச்சியம்மன், கண்டியம்மன், உச்சிமாகாளி, ராக்காச்சி, செல்லியம்மன், எல்லையம்மன், அங்காளம்மன், பேச்சி, இசக்கி, பேராச்சி, போன்ற பெண் தெய்வங்கள் வணங்கப்பட்டு வருகின்றன. நன்மை அளிக்கும் தெய்வங்கள், தீமை அளிக்கும் தெய்வங்கள் என்று கூட இவற்றை வகைப்படுத்துவதுண்டு. சக்தியின் அவதாரமாகவும்,

வடிவமாகவும் பெண் தெய்வங்கள் வணங்கப்படுகின்றன. பெண் தெய்வங்களில் பரவலாக வழிபடப்பட்டு வரும் மாரியம்மனின் இயல்புகளை பற்றிப் பார்ப்போம்.

**மாரியம்மன்**

தமிழகமெங்கும் பரவலாக மாரியம்மன் வழிபாடு காணப்படுகிறது. என்றாலும் தென் மாவட்டங்களில் இவ்வழிபாடு மிகுதியாக கோட்டை மாரியம்மன், இருக்கன்குடி மாரியம்மன், வீரபாண்டி மாரியம்மன் என்ற பெயர்களில் மாரியம்மன் வழிபாடு நிகழ்த்தப்படுகிறது.

மாரி – மழை. மாரியம்மன் வெம்மையைப் போக்கி குளிர்ச்சியைத் தருபவள், மழையாகப் பொழிந்து மண்ணில் உயிர்களைக் காப்பவள் என்ற நம்பிக்கையில் மழைத் தெய்வமாக வழிபடப்படுகிறாள். மாரியம்மன் வழிபாடுச் சடங்கின் போது சக்திக்கரகம் நீரால் நிரப்பப்படுவதும், அது அம்மனாக வழிபடுவதும், வழிபாடு நிறைவடையும் நிலையில் கரகத்தில் உள்ள நீர்நிலைகளில் விடப்படவதுமாகிய செயல்கள் மாரியம்மன் மழைத் தெய்வமாக வணங்கப் படுவதற்குச் சான்றாக அமைகின்றன.

தீச்சட்டி எடுத்தல், மாவிளக்கு எடுத்தல், ஆயிரங்கண் பானை எடுத்தல், சேத்தாண்டி வேடமிடுதல் , முளைப்பாரி எடுத்தல் போன்றவை மாரியம்மனுக்காக மேற்கொள்ளப்படும் சடங்குகளாகவும் நேர்த்திக் கடன்களாகவும் விளங்குகின்றன.

**காளியம்மன்**

தமிழகத்தில் மாரியம்மனுக்கு அடுத்த நிலையில் காளியம்மன் பரவலாக வழிபடப்படுகிறது. காளி என்று வேதங்களில் குறிப்பிடப்படும் இத்தெய்வம் கோப ஆவேசம் கொண்ட தெய்வமாகக் கருதி வணங்கப்படுகிறது. சங்க இலக்கியங்களில் பாலை நிலத்திற்குரிய தெய்வமாகச் சுட்டப்படும் கொற்றவையே காளி என்றும் குறிப்பிடுவதுண்டு. தமிழகக் கிராமங்களில் காளியம்மன் கோயில் தவறாது இருக்கும். பலியிடலும் அங்கமளித்தலும் (உடல் உறுப்புகளாக வடிவமைக்கப் பட்டுள்ள தகடுகளைக் காணிக்கையாகச் செலுத்துதல்) காளி வேடமிட்டு ஆடுதலும் காளியம்மன் வழிபாட்டில் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

**கன்னித் தெய்வ வழிபாடு**

கன்னித் தெய்வ வழிபாடு பெரும்பான்மையும் சிறுதெய்வ வழிபாடே ஆகும். 'கன்னி' என்ற சொல்லிற்குப் 'பூப்படைந்து திருமணமாகாத, கன்னித் தன்மை இழக்காத பெண்' என்று அகராதிகள் பொருள் கூறுகின்றன. இயல்பாகவோ அல்லது கொலை செய்யப்பட்டோ இறக்கும் பெண்களைக் கன்னித் தெய்வமாக வழிபடும் மரபு தமிழகத்தில் பரவலாகக் காணப்படுகிறது. இறந்த கன்னிப் பெண், தன் வீட்டாருக்கு வளமையும் பாதுகாப்பும் அளிப்பதாகவும், அவள் கன்னிப் பெண்கள் மீது இறங்கி அருள்வாக்குச் சொல்வதாகவும் நம்பப்படுகிறது. வீட்டுத் தெய்வமாக, குலதெய்வமாக, கன்னித் தெய்வங்களே வழிபடப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

**ஏழு கன்னிமார்**

கன்னித் தெய்வங்கள் ஏழு என்று குறிப்பிடும் வழக்கம் காணப்படுகிறது. ஏழு கன்னிமார் 'சப்த கன்னியர்', ஏழு கன்னித் தெய்வங்கள் என்று இதனைக் கூறுவதுண்டு. ஏழு கன்னித் தேவதைகள் வானத்திலிருந்து இறங்கி வந்து, நீராடி களிப்பது, துன்பப்படுவோருக்கு உதவுவது போன்ற கதைகள் பரவலாக உள்ளன. வனப் பகுதிகளிலும் மலையை ஒட்டிய பகுதிகளிலும் திறந்த வெளியில் கன்னித் தெய்வக் கோயில்கள் இருக்கின்றன.இவற்றை வனத்தேவதைகளாகக் கொண்டு வனத்தில் வழிபடும் வழக்கமும் காணப்படுகிறது. ஒரே கல்லில் ஏழு பெண் உருவங்கள் வடிவமைக்கப்பட்டு வழிபடப்படுகிறது. இத்தெய்வங்களுக்கு என்று தனித்த வழிபாட்டு முறைகள் இல்லை. பிற தெய்வங்களுடன் இணைத்தே வழிபடப் படுகின்றன.

**முடிவுரை**

தன்னைக் காத்துக் கொள்ள மனிதனால் உருவாக்கப்பட்ட ஒன்றுதான் தெய்வ வழிபாடு ஆகும். அவை படிப்படியாக வளர்ச்சி அடைந்து எல்லாத் தேவைகளுக்கும் பின்பற்றப்படும் ஒன்றாக மாற்றம் பெற்றுள்ளது. தமிழர் தெய்வ வழிபாட்டில் குலதெய்வ வழிபாடு என்பது வளர்ந்து வரும் காலச் சூழ்நிலையில் அருகி வருகிறது. சிறுதெய்வ வழிபாட்டில் குலதெய்வ வழிபாடு முதன்மையானது ஆகும். குலதெய்வ வழிபாட்டில் பெரும்பான்மையாக வழிபாட்டிற்குரிய தெய்வமாக அமையப்பெற்றுள்ளது. தமிழரின் வாழ்வியல் தொடங்கும் தொன்மக் காலத்தில் இருந்து பெண்மைப் போற்றப்பட வேண்டும் என்பதனை அடுத்த தலைமுறைக்குப் பதியமிடுவதாகவே சிறுதெய்வ வழிபாடு அமைகின்றது. பெண் தெய்வ

வழிபாடு என்பது பழமையான வரலாற்றினையும், புதிய சிந்தனை மரபினையும் கொண்ட வரலாற்றுப் பெட்டகமாகவே திகழ்கின்றது என்பதை அறிய முடிகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1.சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப - 225

2.முனைவர் செ. இராஜேஸ்வரி, பெண் தெய்வ வழிபாடு, ப - 158

3.ப. சரவணன், நாட்டார் தெய்வங்கள், ப - 123

4.பி. எல். சாமி, தமிழ் இலக்கியத்தில் தாய் தெய்வ வழிபாடு, ப – 153

5.திருவருட்பா மூலம் உரையும், ப - 59

6.தேவாரம் மூலம் உரையும், ப- 5

7.அகநானூறு மூலம், பா - 360 : 6 – 7

8.மேலது, பா - 370:12-14

9.மேலது, பா - 345: 3-4

**துணைநூற் பட்டியல்**

1.சக்திவேல். சு. நாட்டுப்புற இயல் ஆய்வு, மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை- 600108, முதற்பதிப்பு - ஜூன்.1983.

2.முனைவர் இராஜேஸ்வரி. செ. பெண் தெய்வ வழிபாடு, சந்திரோதயம் பதிப்பகம், மதுரை- 625 018, பதிப்பு - 2020.

3.சரவணன். ப. நாட்டார் தெய்வங்கள், சாரதா பதிப்பகம், பதிப்பு - 2008

4.சாமி. பி. எல். தமிழ் இலக்கியத்தில் தாய் தெய்வ வழிபாடு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பதிப்பு - 2011.